# A comparative study based on the Hindu and Islamic cultural values.

## ஒப்பாய்வு நோக்கில் இந்து - இஸ்லாமிய பண்பாட்டு விழுமியங்கள்

**திருமதி சுகந்தினி சிறிமுரளிதரன்,எம்.பில்**

முதுநிலை விரிவுரையாளர், தரம்-I, இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

### அறிமுகம்

பல்லின மொழி, சமய மக்கள் வாழ்கின்ற இலங்கைத்திருநாட்டின் மொத்த சனத்தொகையில் 18% க்கு மேற்பட்ட மக்கள் பின்பற்றும் மதம் இந்து மதமாகும். அதே போன்று 7.5% மக்கள் பின்பற்றும் மதம் இஸ்லாம் மதமாகும்.[1]

இஸ்லாம் என்னும் அரபிச்சொல்லுக்கு அமைதி பெறுவதற்கான நெறி என்பது பொருள். இஸ்லாம் ஒரு சமயம் என்பதுடன் அது நாகரிகம், அரசியல், கருத்தியல், பகுத்தறிவு என்ற மனித வரலாற்றின் பன்முக இயக்கங்களையும், சிந்தனைகளையும் கொண்டிருக்கின்றது. 'ஆண்டவனிடத்திலிருந்து அதிக சாந்தியடைந்துகொண்டும் அவனுக்கு அதிக திருப்திசெய்து கொண்டும் உன்னுடய ரக்சகனிடம் மீண்டும் செல்வாயாக' என்கிறது குர்ஆன்.[2] (89:28) ஆதலின் இஸ்லாம் என்னும் பதம் தேவ சாந்தியையும், அதைப் பெறுதற்குரிய மார்க்கத்தையும் ஒருங்கே காட்டக்கூடிய ஓர் அழகிய பதமாயிருக்கிறது. இந்து மதம் தொடக்கத்தில் பெயர் எதுவுமே இல்லாதிருந்தது.[3] இந்து என்ற சொல்லானது கிரேக்கர்கள், அரபியர் போன்ற அயல் நாட்டினர் பாரதத் துணைக்கண்டத்தினை சிந்து ஆற்றின் பெயரால் 'ஹிந்து' என்று அழைத்தனர். அது நாளடைவில் தமிழில் 'இந்து' என்று வழங்கப்படுகின்றது. தென்னாசியாவில் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பல்வகைப்பட்ட இனங்கள் மத்தியில் நிலவிவந்த பல வழிபாட்டு முறைகளும் தத்துவங்களும் காலப்போக்கில் இணைந்து இந்து மதம் எனும் பெயரைப்பெற்றது.

### ஆய்வின் நோக்கம்

இன்று சமயங்களில் ஒப்பீட்டு ஆய்வு வேகமாக வளர்ந்து வரும் ஒரு துறையாகும். இந்து - இஸ்லாம் மதங்களுக்கு இடையே தனித்துவமான அம்சங்கள் சிறப்பாக உள்ளன. ஆனாலும் இவ்விரு மதங்களுக்கும் இடையே காணப்படும் பொதுவான ஒப்புமையுடைய பண்பாட்டு விழுமியங்கள் பற்றி ஆராய்வது இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வளவு காலமும் வாழ்ந்த மக்கள் சுருதி, யுக்தி, அனுபவம் எனும் முத்திறத்தாலும் பண்பாட்டு விழுமியங்களை செம்மையாக கடைப்பிடித்து வந்தார்கள். ஆனால் இன்று நவீன உலகத்திற்கும், மத மாற்றத்திற்கும் இடையில் வாழ்ந்து வருகின்ற இளம் சமுதாயத்தினரை நல்ல விழுமிய பண்புள்ளவனாக உருவாக்கவேண்டிய தேவை உள்ளது. மக்கள் கடைப்பிடித்து வந்த பண்பாட்டு விழுமியங்களை மழுங்கவிடாது இளம் சமுதாயத்தினரிடம் ஒப்படைப்பது காலத்தின் தேவையாகும்.

ஒரு மதமானது ஏனைய மதங்களிலுள்ள நல்ல கருத்துக்களை தனதாக்கிக்கொள்வது இயல்பு. இந்துமதம் பற்றி மகாத்மாகாந்தி கூறுகின்ற போது, 'எமது இந்துமதமானது குறுகிய கோட்பாடுகளை உடையது அன்று. அதுவும் இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம் போன்றவற்றில் காணப்படும் நல்ல ஒழுக்கநெறிகளையும் தன்னிடத்தே கொண்டது' என்கின்றார். இவ்வாறாக இந்து - இஸ்லாம் பண்பாட்டு விழுமியங்களது ஒப்புமையை ஆராய்வதன் மூலமாக 'நல்ல சிந்தனைகள் எங்கிருந்தாலும் நம்மை வந்து நாடுவதாக'[4] (*Rigveda*, 1-89-1) எனும் வேத சிந்தனைக்கு அமைய பரம்பொருளைத் தேடும் இறை அனுபவத்தில் நாம் எல்லோரும் சமம் என்ற உணர்வுடன் ஒவ்வொருவரும் தாம் பெற்ற இறை அனுபவத்தை பகிர்ந்து கொள்வதும், அதன் வழியாக தங்கள் இறையனுபவத்தை ஆழப்படுத்திக்கொள்வதும், இதன் மூலமாக ஒருவருக்கு ஒருவர் உதவி வழங்குவதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

சமூக, பொருளாதார, அரசியல், வரலாற்று மாற்றங்களும், இம்மாற்றங்களினால் உருவான கல்வி, தொழில், உலகத்தொடர்புகள், குறிப்பாக வெளிநாட்டுப் பொருளாதாரத் தாக்கம், சுனாமி போன்ற இயற்கை உற்பாதங்கள், உலகமயமாக்கல், உள்நாட்டு அமைதியின்மை, முதலானவையும், பண்பாட்டு விழுமிய கொள்ளலும், கொடுத்தலும் என்ற பரிமாற்றமுறை போன்ற காரணிகளினால் சமகால செல்நெறியில் இந்து - இஸ்லாம் பண்பாட்டு விழுமியங்கள் மாற்றுருப்பெறுவதைக் காணமுடிகின்றது. எனினும், 'பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினாலே' எனும் நன்னூலார் கூறியுள்ள கருத்தினையொட்டிக் காலத்திற்கு ஒவ்வாதனவற்றை கைவிடவேண்டியதே. அதே வேளையில் காலத்திற்கு ஏற்றவாறு சமய, பண்பாட்டு, விழுமிய சிந்தனைகள் மூலஇலக்கியங்களில் இருப்பின் அவற்றினை எடுத்துக்கூறுதலும், விளக்குதலும் பொருத்தமானதே. காலத்திற்கு ஏற்றவகையில் மூலஇலக்கியங்களிலுள்ள சமய, பண்பாட்டு, விழுமிய சிந்தனைகளை எடுத்துக்கூறுதலும், விளக்குதலும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு முறையியல்

இரு மதங்களினதும் பண்பாட்டின் பல்வேறு பரிமாணங்களை எடுத்து விளக்குவதால் அவற்றை எடுத்துக்காட்டுவதற்கு விபரண முறையியல் பயன்படுத்தப்படுகின்றது.

இரு மதங்களுக்கும் இடையே காணப்படும் பண்பாட்டு அம்சங்களின் ஒப்புமைகளை எடுத்து விளக்குவதினால் ஒப்பியல் ஆய்வு பயன்படுத்தப்படுகின்றது.

ஆய்வு வடிவமைப்பு என்ற வகையில், இந்து - இஸ்லாம் மதங்களிடையே பின்வரும் ஒப்புமைகள் இனங்காணப்பட்டுள்ளன.

(1) தத்துவ விழுமியம்
(அ) இறைக்கோட்பாடு
(ஆ) ஆன்மக்கோட்பாடு
(இ) உலகக்கோட்பாடு
(ஈ) கர்மக்கோட்பாடு
(உ) முத்திக்கோட்பாடு

(2) சமய விழுமியம்

(அ) வழிபாட்டுக்கடமைகள்
(ஆ) மனித விழுமியங்கள்

(3) கலை, கலாசார விழுமியம்

## விவாதங்களும், தீர்வுகளும்

இந்து - இஸ்லாம் மதங்களினது மூலஇலக்கியங்கள் தருகின்ற செய்திகளின் அடிப்படையில் நோக்கும் போது இருசமயங்களிற்கும் இடையே பல ஒப்புமையுள்ள அம்சங்கள் காணப்படுகின்றன. என்பது இவ்வாய்வின் மூலம் பெறப்படுகின்றது. அவற்றில் எவ்வகையான பண்பாட்டு அம்சங்களில் ஒற்றுமைப்படுகின்றன என்பதையும், எவ் அம்சங்களில் அவை வேறுபடுகின்றன என்பதனையும் பின்வருமாறு இனம்காணமுடிகின்றது. அந்தவகையில் தத்துவ விழுமியங்கள், சமய விழுமியங்கள், கலை கலாசார விழுமியங்கள் எனும் மூன்று பிரிவுகளாக நோக்கப்படுகின்றது.

தத்துவ விழுமியங்களில் இறைக்கோட்பாடு என்று நோக்கும் போது இரு மதங்களும் கடவுள் ஒன்றை நம்புகின்றனர். இந்து மதத்தவர்கள் ஒரு இறைவனை வெவ்வேறு வடிவங்களாக வணங்குவர். பல தெய்வங்களின் ஊடாக ஒரே பரம்பொருள் தத்துவத்தை உணர்ந்தமை வேதப்பண்பாட்டின் சிறப்பம்சம் ஆகும். 'ஏகம் சத் விப்ரா; பகுதா வதந்தி' (இருக்கு வேதம் 1:164) இஸ்லாமில் 'அல்லாஹ்' என்ற சொல் தனித்துவம் வாய்ந்தது. இறைவன் ஒருவனே என்பதை பின்வருமாறு தெளிவுறுத்துகின்றது. 'மனிதர்களே உங்கள் வணக்கத்திற்குரியவன், வணக்கத்திற்குரிய அல்லாஹ் ஒருவனேதான். அறவந்த அருளாளனும் நிகரற்ற அன்புடைய அவனைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனுமில்லை'. (குர் ஆன் 2:163)

இரு சமயங்களிலும் ஆன்மிகத்துறையில் பல தலைவர்கள் தோன்றி மக்களிடம் இறை ஒருமைப்பாட்டையும், இறை நம்பிக்கையையும் ஆழமாக வேரூன்றச் செய்தனர். உயர்ந்த எண்ணங்கள் உடைய எளிய வாழ்வின் சிறப்பை எடுத்துக்கூறினர். தாங்களும் வாழ்ந்து காட்டினர். 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற உயர்ந்த கோட்பாட்டை வலியுறுத்தினர். இஸ்லாம் சமயம் பரவுவதற்கு காரணமாக இருந்தவர்களை 'சூபிகள்' என அழைப்பது போன்று, இந்து சமயம் பரவுதற்கு காரணமாக இருந்தவர்களை 'சித்தர்கள்' என அழைக்கப்பட்டனர்.

அடுத்து ஆன்மக்கோட்பாடு பற்றி நோக்கும் போது இந்துமதமும், இஸ்லாம் மதமும் ஆன்மக்கோட்பாட்டில் சிற்சில வேறுபாடுகள் காணப்பட்டாலும் இரண்டு மதமும் ஆன்மாவை உள்ள பொருள் என்றும், அவற்றை இறைவன் படைத்தான் என்றும் அவை தாம் செய்த வினைக்கேற்ப பிறவி எடுக்கின்றன என்றும் ஆன்மாக்கள் இறைவனோடு தொடர்பின்றி வரமுடியாது என்றும் கூறும் கருத்துக்கள் ஒற்றுமையுடையதாகவே காணப்படுகின்றது. இந்து மதம் ஆன்மாக்கள் பல என்றும் அவை செய்யும் வினைக்கேற்ப மீண்டும் பிறவி எடுக்கும் என்றும் கூறுகிறது. ஆனால் இஸ்லாம் மதம் இதனை ஏற்றுக்கொள்வதில்லை. ஆன்மா உள்பொருள் என்ற அடித்தளத்தில் இருமதங்களும் ஒற்றுமைப்பட்டும், ஆன்மாக்களின் எண்ணிக்கையில் மாறுபாடான கருத்தும் காணப்படுவதை நோக்கமுடிகிறது.

அடுத்து, உலக கோட்பாடு பற்றி நோக்கும் போது இரு மதங்களுக்கும் இடையே சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதாவது கடவுளை இந்து மதம் பிரமம் என்று கூறுவதோடு, அப்பிரமத்திலிருந்து உலகம் தோன்றி அப்பிரமத்தினுள்ளே ஒடுங்குகின்றது என்கிறது. ஆனால் இஸ்லாம் உலகத்தோற்றம் மட்டுமே கூறுகின்றது. ஒடுக்கம் பற்றி கூறவில்லை. இவ்வாறு வேறுபாடுகள் காணப்பட்டாலும் இரு மதங்களும் இறைவனால் உலகம் தோற்றுவிக்கப்பட்டது என்று கூறுவதில் ஒற்றுமையுடையதாய் காணப்படுகின்றது.

அடுத்து, கர்மக்கோட்பாடு பற்றி நோக்கும் போது, இருமதங்களும் கர்மகோட்பாட்டின்படி அவரவருடைய நற்செயல்கள், தீய செயல்களின் பலன்கள் இறைவனால் கொடுக்கப்படும் என்கிறது. 'நற்செயலைச் செய்பவன் பத்துமடங்கு பலனை அனுபவிப்பர். தீமை செய்பவர் தீமையையே பரிசாக பெறுவர்' எனக் குர் ஆன் கூறுகிறது. ஆகவே, இரு மதங்களும் ஒவ்வொரு செயல்களுக்கும் விளைவு உண்டு. தப்பமுடியாது. அனுபவித்தே ஆகவேண்டும் என்பதை எற்றுக்கொள்ளுகிறது. ஆனால் கர்ம விதி என்ற ஒன்று இல்லை என இஸ்லாம் கூறுகிறது.

அடுத்து, முத்தி கோட்பாடு பற்றி நோக்கும் போது, முத்தி என்பதை வீடு பேறு என்ற சொல்லால் குறிப்பிடுவார். இறப்பின் பின்னர் ஓர் ஆன்மா விடுதலை பெறுதலே மோட்சம் அடைதல் அல்லது முத்தியடைதல் எனக்கூறப்படுகிறது. இந்து மதம் ஆனமாக்களின் பக்குவ நிலைக்கு ஏற்ப இறைவன்

இருவடிவம் தாங்கி வந்து முத்தி கொடுத்தருளுவார் என்று கூறுகின்றது. இஸ்லாமியர் கூறுகின்ற முத்தி என்பது உலக காரியங்களில் ஈடுபட்டு செய்த பாவ புண்ணியங்களிலிருந்து விடுபடுதல் ஆகும். இதனை துன்பவேதனையிலிருந்து விடுபடுதல் என்றும், நன்மை செய்வதால் நற்பயனையும், தீமை செய்யும் போது தீமையையும் அனுபவிக்கின்றனர் என்றும் அதிலிருந்து மீட்சி பெறவேண்டும் ஆயின் நற்காரியங்கள் செய்ய வேண்டும் என்றும் கூறுகின்றது. இவ்வாறாக இந்து மதமும், இஸ்லாம் மதமும் இறுதியில் ஆன்மாவும், இறைவனும் இரண்டறக்கலந்து நிற்கும் என்றும் இதனை 'தாடலை' என்றும் கூறுவதன் ஊடாக இவ்விரு மதங்களும் கூறுகின்ற விடுதலை பற்றிய அல்லது முத்தி பற்றிய கருத்துக்களில் இறைவனை அடைவதே என்பதை வெவ்வேறு விதமாக கூறினாலும் இரண்டும் ஒரே கருத்தினையே சுட்டி நிற்பதைக்காணலாம்.

அடுத்து, சமய விழுமியங்களில் வழிபாட்டுக் கடமைகள் பற்றி நோக்கும் போது, இந்து சமய வழிபாட்டுமுறையின் போதும் - இஸ்லாத்தின் தொழுகையின் மூலமும் ஆத்மிக லௌகீகப் பயன்களைப் பெற்றுக்கொள்ளமுடிகின்றது. இறையச்சம், ஆத்மிகபலம், பாவங்களிலிருந்து பாதுகாப்பு, இறைநெருக்கம், சுவர்க்கம் போன்ற பயன்களையும் லௌகீக பயன்களாக தூய்மை, கட்டுப்பாடு, ஒழுங்கு, உடற்பயிற்சி போன்ற பயன்களையும் பெற்றுக்கொள்ள முடிகின்றது. இந்து சமயத்தில் விரதம் என்பதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் கூறிய வரைவிலக்கணம் மிகவும் விசேடமானது. 'மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேடமாக வழிபடுதல் விரதமாகும்' என்கிறார். நோன்பு என்பது இஸ்லாமியர்கள் மீது கடமையாக்கப்பட்ட ஒன்றாகும். அது பற்றி திருக்குர் ஆன் 'ஈமான் கொண்டவர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீது (அது) விதிக்கப்பட்டுள்ளது.(அதன் மூலம்) நீங்கள் தூய்மையுடையோர் ஆகலாம்.(குர் ஆன் 2:183) என்று கூறப்படுகின்றது. இரு சமயங்களிலும் விழாக்கள் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. அவை சமூக உறவை வளர்க்கவும், ஒற்றுமை, அன்பு, கலாசார அம்சங்கள் ஆகியவற்றை கட்டியெழுப்பவும் உதவுகின்றன.

அடுத்து, இரு மதங்களும் சமகால செல்நெறியில் அருகிவருகின்ற மனிதவிழுமியச்சிந்தனைகளை எடுத்துக் கூறுகின்றன. குறிப்பாக, இரு மதங்களும் ஆண், பெண் உறவிற்கு கடுமையான பண்புடைமை விதிகளை வகுத்துள்ளன. தகாத பாலுறவுக்காக அளிக்கப்படும் தண்டனை பற்றியும் குர் ஆன் வசனம் கூறுகின்றது. 'விபச்சாரம் செய்த பெண் விபச்சாரம் செய்த ஆண் இவர்களில் ஒவ்வொருவருக்கும் நூறு சாட்டையடி கொடுங்கள். மேலும் நீங்கள் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாள் மீதும் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் அல்லாஹ்வுடைய தீனில் - மார்க்கத்தில் விவகாரத்தில் இவர்கள் மீதுள்ள இரக்கம் உங்களை பாதித்துவிடக்கூடாது. இவர்களுக்குத் தண்டனை அளிக்கும் போது இறைநம்பிக்கையானவர்களின் ஒரு குழு அப்போது இருக்க வேண்டும்'. (குர் ஆன் 24:2)என்கிறது. இந்து மதம் 'இந்த உலகத்தில் மனிதனுக்கு பிறன் மனைவியைப் புணர்தல் போல ஆயுளைக் குறைக்கும்படியான காரியம் வேறு இல்லை'.[5] (மனுதர்மசாஸ்திரம் அத் 04, 134)என்கிறது.

அடுத்து, கலை கலாசார விழுமியங்களை நோக்கும் போது, மேற்கத்தைய கலாசாரம் ஆடைத்தெரிவில் நுழையாது பாதுகாப்பதற்கு இரு மதத்தினரும் முயற்சி செய்கின்றனர். குர் ஆன் பெண்களின் உடை பற்றி கூறும் போது 'அவர்கள் (பெண்கள்) தங்களுடைய துப்பட்டிகளின் முந்தானையைத் தங்கள் மீது தொங்கவிட்டு கொள்ளட்டும். அவர்களை அறிந்து கொள்வதற்கும், அவர்கள் தொல்லைக்கு ஆளாகமலிருப்பதற்கும் இதுவே மிகவும் ஏற்றமுறையாகும்' என்கிறது. (குர் ஆன்; 33:59) அந்நிய ஆண்களின் கீழான பார்வையிலிருந்து பெண்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவே இம்முக்காடு இடும் தன்மையினைத் திருமறை எடுத்துக்கூறுகிறது. இஸ்லாமிய ஆடை அணிகலங்களைப்போன்று இறுக்கமான கட்டுப்பாடுகள் இந்துமதத்தில் காணப்படாதபோதிலும் கூட ஆலயங்களுக்கு செல்லும் போது பெண்கள் சேலையும், ஆண்கள் வேட்டி, சால்வையும் அணிந்து செல்வது மரபாகக் காணப்படுகின்றது.

இவ்வகையில் இருமதங்களுக்கும் இடையில் அடிப்படை அம்சங்களில் ஒற்றுமைத்தன்மை இருப்பதை அறிந்துகொள்ளமுடிகின்றது.

## ஆய்வின் முடிவுகள்

இந்து - இஸ்லாம் சமயங்களில் தமது வேறுபட்ட கொள்கைகள், கோட்பாடுகள், சட்டங்கள், சடங்கு முறைகள், பழக்கங்கள், பாரம்பரியங்கள் மத்தியிலும் ஒப்புமையுடைய பல பண்பாட்டு விழுமியங்கள் காணப்படுகின்றன என்பது இவ்வாய்வின் மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளது. இவ்வாறான சமய உரையாடல் மூலமாக பழங்கால கசப்புணர்வு மாறும். வேறுபாடுகளுக்கு அப்பால் ஆன்ம நேயம் மலரும், தாழ்வு, உயர்வு சொல்லும் சமய பேதம் அகலும், சமய வேறுபாடற்று கூடிப் பனியாற்றும் நிலை உண்டாகும். தம் சமயத்தை விட பிறரிலும், நல்லவர், வல்லவர் உள்ளனர் என்ற உண்மை புலப்படும், தியாகம் மலரும், பல்சமய உறவை வலுவாக்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். இந்து – இஸ்லாமியர் - கிறிஸ்தவர் - பௌத்தர் என பல சமயிகளும் உள்ள இலங்கைத்திருநாட்டில் சாந்தி, சந்தோசம் உண்டாகும். எனவே நாட்டில் யுத்த மேகங்கள் களைந்து, துன்ப துயரங்கள் மறைந்து, சாந்தி சமாதானம் ஏற்பட்டு நிலைத்திருக்கும் அபிவிருத்தி ஏற்பட இந்து - இஸ்லாம் மத நல்லிணக்கம் மிகவும் அவசியமாகும். எமது சமூகத்தின் எதிர்காலம் தூர நோக்குக் கொண்டதும்,

ஆழமானதுமான அடித்தளத்தினை இவ்வாறான சமய உரையாடல் மூலமாகக் கட்டியெழுப்பமுடியும்.

**உசாத்துணைகள்**

1. http://www. Statistics.gov.lk & Department of Census and Statistics
2. usui Ali, A. (1983)The Holy QUR-AN(Text Translation and Commentary), Vol 1-3(New - Edition), Ashraf Printing Press, 7, Lahore.
3. ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கராச்சாரிய சந்திரசேகரேந்திர சுவாமிகள், (1976), தெய்வத்தின் - குரல் - 1, வானதிப்பதிப்பகம், சென்னை. ப.125.
4. தாமோதரபட்டர், (1957), இருக்கு வேதம், ஸ்ரீபாத சர்மா(பதி).
5. திரிலோக சீதாராம் (தமிழில்),(1986), மனுதர்ம சாஸ்திரம், சென்னை.